CSI தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம்

# GLOBAL MISSIONARY SOCIETY

Estd. : 2005

# குளோபல் மிஷனெரி சங்க மலர்

மலர் - 20 இதழ் - 7 ஜூலை - 2026



நமது GMS ஊழிய பயன்பாட்டிற்கான புதிய வாகனம்
CSI-TND உபதலைவர் **Rev. P. மோசஸ் ஜெபராஜ்** ஐயா அவர்களால்
பிரதிஷ்டை செய்யப்பட்டு அதனுடைய சாவி குருத்துவ செயலர்
**Rev. Dr. D.G.A. தாமஸ் ஐயா** அவர்கள் மூலமாக நமது
பொதுக்காரியதரிசி அவர்களிடம் வழங்கப்பட்டது.





ஆயத்தப்படு.... அறிவித்திடு... ஆதாயப்படுத்து...

**President**
**Mr. P. Jefferson Samuel Raj**
Global Missionary Society

**Vice President**
**Rev. Dr. A. Devarajan**
M.A.,M.Sc.,B.D.,D.Min.,
Global Missionary Society,

**Treasurer**
**Mr.A. Kanagaraj**
Global Missionary Society

**Joint Secretary**
**Rev.P. Johnson Daniel**
D.Pharm.,M.A.,B.Th.,
Global Missionary Society,

**General Secretary**
**Rev. V. Samuel Ravi Raj** M.A.,M.Sc.,MSW.,LLB.,B.D.,
Global Missionary Society.




GMS ஊழிய பயன்பாட்டிற்காக
CSI-TND முன்னால் பேராயர்
Rt. Rev. Dr. S.E.C. தேவசகாயம் ஐயா
அவர்கள் குடும்பத்தின் சார்பாக
இந்த பழைய இரண்டு சக்கரவாகனம்
வழங்கப்பட்டுள்ளது.



கிறிஸ்தியாநகரம் சேகரம்
வில்லிக்குடியிருப்பு சபையை சேர்ந்த
திரு. P. ஜெபஸ் ஷெர்வின் அவர்கள்
குடும்பத்தாரால் வாங்கிக் கொடுக்கப்பட்ட
எலக்ட்ரிக் இருசக்கர வாகனம் தருமபுரி
மாவட்டம். பெத்தூர் பணித்தளத்தில்
ஊழியம் செய்யும் சகோ. கதிரேசன் ஸ்டீபன்
அவர்களுக்கு பொதுக்காரியதரிசி ஐயா
அவர்களால் ஜெபித்து சாவி வழங்கப்பட்டது




GMS ஊழிய பயன்பாட்டிற்காக
மெஞ்ஞானபுரம் சேகரத்தை
சேர்ந்த திரு.K. ஜெயராஜ் அவர்கள்
குடும்பத்தின் சார்பாக இந்த பழைய
இரண்டு சக்கரவாகனம்
வழங்கப்பட்டுள்ளது.



சவுந்தராபுரம்
திருச்சபையில்
நடைபெற்ற
மிஷனெரி ஆதரவு
விற்பனை விழா







திருப்பத்தூர் மாவட்டம், தோரணம்பதி பணித்தளத்தில் ஊழியம் செய்யும் சகோ. முனாசாமி அவர்கள், திருமண்டல உபதலைவர் மற்றும் சண்முகபுரம் சேகரத் தலைவர் Rev. P. மோசஸ் ஜெபராஜ் ஐயா அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

# G.M.S. மலர்

# குளோபல் மிஷனெரி சங்கம்

## இதழின் உள்ளே...


| | பக்கம் |
|---|---|
| ◈ பொதுக்காரியதரிசி யிடமிருந்து | 2 |
| ◈ தியானப்பகுதி | 6 |
| ◈ பணித்தள செய்திகள் | 10 |
| ◈ வாலிபர் பகுதி | 25 |
| ◈ பணித்தளத் தேவைகள் | 26 |
| ◈ அம்மாவின் அன்பு கட்டளைகள் - பத்து | 29 |
| ◈ சரியான விடை | 31 |
| ◈ திருமறையில் தேடுவோம் | 32 |


### நமது பணிகள்

- ❖ நற்செய்தி அறிவித்தல்
- ❖ சமுதாயப் பணிகள்
- ❖ இலவச தையல்பயிற்சி பள்ளி
- ❖ மருத்துவ ஊழியம்
- ❖ விசுவாசிகளை திருச்சபைகளில் இணைத்தல்
- ❖ புதிய பணித்தளங்களை உருவாக்குதல்
- ❖ பணித்தளங்களில் ஆலயம் கட்டுதல்


தனிப்பிரதி ரூ.10/-
ஆண்டு சந்தா ரூ.100/-
ஆயுள் சந்தா ரூ.1000/-



**பொதுக்காரியதரிசி**
TND – குளோபல் மிஷனெரி சங்கம்
368/11, W.G.C. ரோடு,
தந்தி ஆபிஸ் ரோடு
தூத்துக்குடி – 628 001
போன்: 0461 – 2328911
செல்:9487674959


*உங்கள் அனைத்து காணிக்கைகளையும் சுலபமாக வங்கி மூலம்நேரடியாக எங்கள் வங்கி கணக்கில் செலுத்தி விடலாம். செலுத்துபவர்கள் உங்கள் பெயர்மற்றும் முகவரியை எங்களுக்கு மறவாமல் தொலைபேசியின் மூலம் தெரியப்படுத்துங்கள். மேலும் சுலபமாக இணையவழி மூலமாகவும் அனுப்பலாம்.*

*A/C.Name:- TND Global Missionary Society*

*மாதாந்திர காணிக்கை அனுப்பவேண்டிய வங்கி*

| Bank | IFSC Code No. | Br.Code. | A/C.No. |
|---|---|---|---|
| TamilNadu Mercantile BankTut., | TMBL0000001 | 001 | 001100050302832 |

*ஆலயக் கட்டுமானப் பணிக்காக காணிக்கை அனுப்பவேண்டிய வங்கி*

| Bank | IFSC Code No. | Br.Code. | A/C.No. |
|---|---|---|---|
| Canara Bank<br>Canara Bank | CNRB0001124<br>CNRB001124 | 001<br>001 | 63902200066180<br>63902200062946 |






ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே உங்கள் யாவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

''உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி'' எரேமியா 30 : 17 திருமறையில் எரேமியா தீர்க்கதரிசியை கொண்டு இஸ்ரவேல் மக்களுக்கு சொல்லப்பட்ட வார்த்தைதான் இது. இன்றும் இதைப்போல விசாரிப்பாரற்ற நிலைமையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் மத்தியில்தான் கர்த்தர் நம்மையும் வைத்திருக்கிறார். விசாரிப்பற்றிருக்கிற நம்முடைய வாழ்வில் இந்த ஆண்டவர் எதிலே நம்மை விசாரித்து நமக்கு ஆரோக்கியம் உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்பதை சிந்திப்போம்.

## 1. சமாதானம் இல்லாத காரியத்தில் விசாரிப்பார் (எரே 30 : 5)

கர்த்தர் தந்திருக்கிற ஆசீர்வாதமான வாழ்வில் சில நேரங்களில் நாம் சமாதானமாக வாழ முடிவதில்லை. ஏனென்றால் கடன், வியாதிகள், போராட்டங்கள், அவமானங்கள் போன்ற பல காரியங்களினால் நாம் சமாதானத்தை இழந்து விடுகிறோம். நமது வாழ்வும் நிம்மதியற்றதாகிவிடுகிறது. சிலர் இவ்விதமான வாழ்வை வாழ விரும்பாமல் தங்களை தாங்களே மாய்த்துகொள்ள விரும்பி எல்லாவற்றிற்கும் தீர்வு தற்கொலைதான் என்ற முடிவையும் எடுத்து மரித்து போகிறார்கள். ஆனால் இரட்சிக்கப்பட்ட நமக்கோ கர்த்தர் இவ்விதமாக வாக்குறுதி அளிக்கிறார். இந்த மாதத்திலே உங்களுடைய சமாதானத்தை என்ன காரணத்தினால் இழந்திருக்கிறீர்களோ, எதினால் உங்களுடைய நிம்மதியை இழந்திருக்கிறீர்களோ அதை ஆண்டவர் விசாரித்து உங்களுக்கு அதிலே சமாதானத்தை கட்டளையிடுவார்.

யோபு 5 : 24 உம்முடைய கூடாரம் சமாதானத்தோடிருக்க காண்பீர் என்ற வேதவாக்கியத்தின்படி ஆண்டவர் குடும்பத்திற்குள் காணப்படுகிற பிரிவினை, போராட்டங்கள், வியாதிகள், கடன்பிரச்சனைகள் எல்லாவற்றையும் மாற்றி மிகுந்த சமாதானத்தை அருளிச்செய்வார்.

## 2. பயப்படுகிற காரியத்தில் விசாரிப்பார்: (எரேமியா 30 : 10)

நம்முடைய ஆண்டவர் நம்மை சகலவிதமான காரியங்களிலும் விசாரிக்கிறவர். ஆகையினால்தான், தம்முடைய ஜனங்களை வருத்தப்படுத்திகொண்டிருக்கிற பயம் என்கிற அடிமைத்தனத்திலிருந்து அவர் நம்மை விடுவிக்க விரும்புகிறார். படிக்கும் மாணவர்களுக்கு கல்வி மற்றும் ஆசிரியர்கள் மீது பயம், வாலிபர்களுக்கு எதிர்காலத்தை குறித்த பயம், வியாதியஸ்தர்களுக்கு தங்கள் பெலவீனத்தை குறித்த பயம் இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரியங்களை குறித்த பயம் உண்டு. கிறிஸ்துவானவர் இங்கே வாக்குக் கொடுக்கிறார். ''நீ பயப்படாதே'' ஏனென்றால் இந்த உலகிலுள்ள அனைத்தையும் படைத்த படைப்பாளர் நம்முடன் இருக்கிறார். கடந்த ஆறுமாதங்கள் நம்முடைய

இயலாமைகளில் நம்மை நடத்தின ஆண்டவர் நம்முடைய ஜீவகால பரியந்தம் உம்மை நடத்த போதுமானவராக இருக்கிறார். அவர் நம்மை நினைத்திருக்கிறார், நிச்சயமாகவே ஆசீர்வதிப்பார்.

கடந்த நாட்களில் சில பணித்தளங்களை பார்வையிட்டு வரவும் மிஷனெரிகளோடு இணைந்து பரிசுத்த உபவாச ஜெபங்களில் பங்குபெறவும் ஆண்டவர் கிருபை தந்தார். உங்களுடைய ஜெபங்களில் கீழ்க்கண்ட காரியங்களுக்காக ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1. ஒலப்பாடி பணித்தளத்தில் கட்டி முடிக்கப்படவிருக்கும் நிலையில் உள்ள ஆலயம் இன்னும் ரூ.4,60,000/- கொடுக்கப்பட வேண்டியுள்ளதால் தற்போது கட்டப்படாமல் உள்ளது.
2. சின்னக்கொள்ளியூர் பணித்தளத்தில் உள்ள ஆலயம் இடுப்பளவு உயரம் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. அதனை கட்டி முடிக்க இன்னும் ரூ.7,00,000/- தேவைப்படுகிறது. இங்கு ஆராதனைக்கு சுமார் 70 பேர் பங்குபெறுகிறார்கள். வாரந்தோறும் ஆலய ஆராதனை, பரிசுத்த உபவாச ஜெபக்கூடுகை, முழு இரவு ஜெபம், கன்வென்சன் கூடுகை, ஞாயிறு பள்ளி அனைத்தும் அங்குள்ள மர நிழலிலும், விசுவாசிகளுடைய வீடுகளிலும் நடைபெற்று வருகிறது. ஆகவே இத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
3. தோரணம்பதி பணித்தளத்தில் மிஷனெரியாக இருக்கும் திரு. முனாசாமி வீடு முற்றிலும் சேதமடைந்து 7 ஆண்டுகளாக அங்கு ஊழியர் தங்கியிருந்து ஊழியம் செய்ய முடியாத சூழல் உள்ளது. அதனை புதுப்பிக்க ரூ.7,00,000/- செலவாகும் என்று எஞ்சினியர் மதிப்பிட்டுள்ளார். எனவே அதற்காகவும் ஜெபியுங்கள்
4. ஜம்மணப்புதூர் பணித்தளத்தில் மிஷனெரியாக இருக்கும் திரு. ஜாண் அவர்களுடைய வீடும் முற்றிலும் சேதமடைந்து கடந்த 9 ஆண்டுகளாக ஊழியர் தங்கியிருந்து ஊழியம் செய்ய இயலாத வகையில் உள்ளது. அதனை சீரமைக்க ரூ.3,00,000/- ஆகும் என்று எஞ்சினியர் மதிப்பிட்டுள்ளார். ஆகவே இதற்காகவும் நீங்கள் ஜெபிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## மனமாற நன்றி கூறுகிறோம்

நம்முடைய GMS ஊழிய பயன்பாட்டிற்காக புதிய வாகனம் வாங்குவதற்காக திரு. கிறிஸ் ரவி குணபாண்டியன், திரு. ரியான் ரவி குணபாண்டியன், திரு.சாமுவேல் ரவி குணபாண்டியண், திரு.ஜோனத்தான் ஜெபர்சன், செல்வி. ஜோன் சாரா ஜெபர்சன், திரு.ஜோகன் ஜெபர்சன், செல்வி. ஜோகன்னா ஜெபர்சன் ஆகிய குடும்பத்தின் பிள்ளைகள் உற்சாகமான நன்கொடை காணிக்கைகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலும் GMS குடும்பமாகவும் வாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

கடையனோடை சேகரத் தலைவர் மற்றும் சேகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் இணைந்து பட்டுக்கோணம்பட்டி பணித்தளத்தில் மிஷனெரி இல்லம் கட்டித்தர முன்வந்திருக்கிறார்கள். அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலும் GMS குடும்பமாகவும் வாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

தூத்துக்குடியிலுள்ள சண்முகபுரம் சேகரத் தலைவர் மற்றும் சேகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் இணைந்து கல்லாறு பணித்தளத்தில் மிஷனெரி இல்லம் கட்டித்தர முன்வந்திருக்கிறார்கள். அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலும் GMS குடும்பமாகவும் வாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

மிஷனெரிகளின் ஊழிய பயன்பாட்டிற்காக CSI-TND முன்னால் பேராயர் Rt.Rev.Dr.S.E.C. தேவசகாயம் ஐயா அவர்கள் குடும்பத்தின் சார்பாகவும், மெஞ்ஞானபுரம் சேகரத்தை சேர்ந்த திரு.K. ஜெயராஜ் அவர்கள் குடும்பத்தின் சார்பாகவும் பழைய இருசக்கர வாகனம் மற்றும் கிறிஸ்தியாநகரம் சேகரம் வில்லிக்குடியிருப்பு சபையை சேர்ந்த திரு.P. ஜெபஸ் ஷெர்வின் அவர்கள் குடும்பத்தின் சார்பில் எலக்ட்ரிக் இருசக்கர வாகனமும் வழங்கியுள்ளார்கள். அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலும் GMS குடும்பமாகவும் வாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

## நடைபெற்ற அபிவிருத்தி ஊழியம்:

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 05.06.2026 அன்று வகுத்தான்குப்பம் திருச்சபையில் இரவு ஜெபத்தில் செய்தி கொடுக்கவும், டூவிபுரம் திருச்சபையில் உபவாச ஜெபம் நடத்தவும், 07.06.2026 அன்று கடையனோடை திருச்சபையில் இரவு ஜெபம் நடத்தவும், 08.06.2026 அன்று ஜெபஞானபுரம் திருச்சபையில் GMS ஜெபம் நடத்தவும், 13.06.2026 அன்று சுந்தரம்நகர் திருச்சபையில் உபவாச ஜெபம் நடத்தவும், 14.06.2026 அன்று வெள்ளாளன்விளை திருச்சபையில் GMS ஜெபம் நடத்தவும், 19.06.2026 அன்று சுந்தரம்நகர் திருச்சபையில் முன்னிரவு ஜெபம் நடத்தவும், 21.06.2026 அன்று ஆசீர்வாதபுரம் திருச்சபையில் ஞாயிறு ஆராதனையில் ஊழியத்தைப பற்றி பகிர்ந்து கொண்டு செய்தி கொடுக்கவும், 26.06.2026 அன்று ஆனந்தபுரம் திருச்சபையில் முன்னிரவு ஜெபம் நடத்தவும், 27.06.2026 அன்று ஸ்பிக்நகர் சேகரம், தங்கம்மாள்புரம் திருச்சபையில் உபவாச ஜெபம் நடத்தவும் GMS அபிவிருத்தி ஊழியர்களுக்கு கர்த்தர் கிருபை செய்தார். இதற்கான வாய்ப்புகளை கொடுத்த சேகரத் தலைவர்கள், சபை ஊழியர்கள் அனைவருக்கும், திருமண்டல பெருமன்ற உறுப்பினர்கள், சேகர செயலர்கள், பொருளாளர்கள், சேகர கமிட்டி அங்கத்தினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## நடைபெற்ற மிஷனெரி பிரதிஷ்டை:

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 28.06.2026 சண்முகபுரம் திருச்சபையாரால் ஆதரிக்கப்படும் திருப்பத்தூர் மாவட்டம், தோரணபதி பணித்தளத்தில் ஊழியம் செய்யும் சகோ. முனாசாமி அவர்கள் தூத்துக்குடி-நாசரேத் பேராய உபதலைவரும், சண்முகபுரம் சேகரத் தலைவருமான Rev.P. மோசஸ் ஜெபராஜ் ஐயா அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இம்மிஷனெரியை பிரதிஷ்டை செய்த ஐய, சேகர பொறுப்பாளர்கள், பாடகர்குழு மற்றும் சபைமக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**நடைபெற்ற விற்பனை விழா:**

21.06.2026 அன்று ஸ்பிக்நகர் திருச்சபையில் மிஷனெரி விற்பனை விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விற்பனை விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடுகளை செய்து தந்த ஸ்பிக்நகர் சேகரத் தலைவர் Rev.G.V. ஜாண்சன் ஐயா அவர்களுக்கும் சபை ஊழியர் மற்றும் சபை மக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**கிறிஸ்துவின் திருப்பணியில்,**

Rev.V. **சாமுவேல் ரவிராஜ்**
M.A.,M.Sc.,MSW.,LLB.,B.D.,
**பொதுக்காரியதரிசி,** GMS.

## பொதுக்காரியதரிசியின் ஜூலை மாத ஊழியங்கள்......

| வ. எண் | தேதி | நேரம் | இடம் & ஊழியம் |
|---|---|---|---|
| 1 | 11.07.2026 | 7.30am | குளோரிந்தா தையல் பயிற்சி பள்ளி திறப்பு விழா பாப்பிரெட்டிப்பட்டி பணித்தளம் |
| 2 | 11.07.2026 | 10.00am | Good News Friends Church பெரியாம்பட்டி |
| 3 | 20.07.2026 | 10.00am | ஐடாஸ்கடர் தையல் பயிற்சி பள்ளி திறப்பு விழா வடகரை பணித்தளம் |
| 4 | 21.07.2026 | 09.30am | மிஷனெரிகளுக்கான பரிசுத்த உபவாசக் கூடுகை திருவண்ணாமலை பணித்தளம் |
| 5. | 21.07.2026 | 03.00pm | மிஷனெரிகளின் பணித்தள அறிக்கை சமர்ப்பித்தல் |
| 6. | 28.07.2026 | 10.30am | அபிவிருத்தி ஊழியர் கூடுகை கிருபைநகர் |

# அருட்பணி




## “யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?”....அதற்கு, “இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்”என்றேன் (ஏசாயா 6 : 8)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

அருட்பணி மீட்புப் பணியாகும். அருட்பணியாளர் மீட்புப் பணியைச் செய்பவர் (சங்கீதம் 16 : 19). இவர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள். இவர்களது பணி மீட்பின் வழி நம்பிக்கையாளராக்குவதாகும். எனவே அருட்பணியின் நோக்கம் ஆத்தும மீட்பாகும்.

உசியா மன்னர் கி.மு 740 முதல் 792 வரை 16 வயதில் துவங்கி 52 வருடங்கள் அரசாண்டார். தனது தந்தை அமட்சியாவைப் போல் பரமனின் பார்வைக்கு மிகவும் நேர்மையாய் நடந்து, கடவுளின் சித்தம் அறிந்து அதன்படி செயல்பட்டு வெற்றிகள் பல பெற்றார். புது வித போர்க்கருவிகளை எருசலேமில் உருவாக்கினார். இதனால் அவர் கீர்த்தி பெருகிற்று. பெருமையும், அகந்தையும், மன மேட்டிமையும் உண்டாக, தன்னைக் குறித்து எண்ணுவதற்கு மேலாகவே எண்ணி, கடவுளுக்கு விரோதமாகத் தூபப்பீடத்தின் மேல் தூபம் காட்ட ஆலயத்தில் பிரவேசித்தார் (IIநாளா 26 : 12-23) ஆண்டவரின் பலசாலியான ஆசாரியர்கள் 80 பேர் அவருக்குப் பின் சென்று தூபம் காட்டுவது, உமக்கு உகந்தது அல்ல எனத் தடுத்தபோதும் தூபம் காட்ட தூபப்பீடத்தின் முன் நிற்க அவரது நெற்றியில் குஷ்டரோகம் தோன்றிற்று. ஆண்டவர் தன்னை அடித்தார் என வெளியே போகத் தீவிரப்பட்டான். மரித்த போது அரசர்கள் அடக்கம் செய்யுமிடத்தில் அடக்கம் செய்யாமல் அதற்கு வெளி நிலத்தில் அடக்கம் செய்தனர். இந்நிலையில் ஆலயத்தின் தூய்மை குறித்து கேள்வி எழுந்தபோது கடவுள் தமது மக்களை நல்வழிப்படுத்தவும், பக்தி வழியைக் காட்டவும் இறையில்லத்தில் தூய்மையை நிலைப்படுத்தவும் விடுக்கும் ஓர் அறைகூவல், யாரை நான் அனுப்புவேன்? யார் நமது பணிக்காகப் போவார்? இக்குரலின் வேதனையினை உணர்ந்த ஏசாயா தனது வாழ்வை அருட்பணிக்கு அர்ப்பணித்தார். அர்ப்பண வாழ்வின் நிலைகளை ஆராய்வோம். அர்ப்பணிப்புடன் அருட்பணி செய்வோம்.

## 1. உணர்ந்திரு: (ஏசாயா 6 : 5)

**....சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே .(ஏசாயா 6 : 5)**

ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தேவாலயத்திற்குள் பிரவேசித்த போது அவர் கண்ட காட்சியும், அவர் பெற்ற அனுபவமும் இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. தேவாலயம் தேவ பிரசன்னத்தால் நிறைந்திருந்த காட்சியைக் கண்டார். சேராபீன்கள் தங்கள் செட்டைகளால் மறைத்து கொண்டு பறந்து ‘‘படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர். பூமி அனைத்தும் அவரது மகிமையால் நிறைந்திருக்கிறது என்றன. இறைப் பிரசன்னத்தின் தரிசனத்தின் வழி இறை உணர்வையும் பெற்றார். எனவே தானும், தன்னைச் சார்ந்தோரும் பாவிகள் என அறிக்கையிட்டார். உசியா தன் நிலை உணராது துணிவுடன் ஆண்டவருக்குத் தூபம் காட்ட தேவாலயத்தில் பிரவேசித்ததால் குஷ்டரோகியானார். குஷ்டரோகம் பாதித்தால் உணர்வு இராது. உணர்வற்ற வாழ்வில் தேவ சமுகத்திலிருந்தும் மூதாதையர் வரிசையினின்றும் தள்ளப்பட்டு புறம்பே அடக்கம் செய்யப்பட்டார்.

இன்னும் தன்னைக் குறித்து எண்ணுவதற்கு மேலாக எண்ணி, அழிவைத் தேடும் சமுதாயத்திற்கு அருட்பணி வழி உணர்வு பெற உதவுவோம். மிரியாம் தன்னைக் குறித்து எண்ணுவதற்கு மிஞ்சி எண்ணியதால் வெண்குஷடம் சரீரத்தில் ஏற்பட்டது. இறை இல்லம் செல்லும் நாம் நம்மைத் தாழ்த்துவோம். இறைப் பிரசன்னத்தை உணர்வோம், உயர்வடைவோம். அழிந்துபோகும் ஆத்துமாவைக் குறித்த உணர்வைப் பெறுவோம், அருட்பணி செய்வோம்.

நெகேமியா (நெகே 1 : 6,7) இஸ்ரயேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகப் பாவம் செய்தோம். நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவம் செய்தோம். நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம். மோசே கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளாதே போனோம் என உணர்வடைந்தவராய் அறிக்கை செய்தார். மீதியான யூதர்களின் விடுதலை வாழ்விற்காக உணர்வுபெற்ற நெகேமியா போல் நாமும் நம் மக்களின் மீறுதல்களை உணர்வோம். அவர்களின் விடுதலையின் தேவையினை உணர்வோம். நம்மை நாமே அர்ப்பணிப்போம், அருடபணி செய்வோம்.

## 2. உடன்படு (ஏசாயா 6 : 8)

ஏலியின் நாட்களை போல் ஒழுக்கக்கேடும், அந்நிய வழிபாடுகளும் நிறைந்து காணப்பட்ட நிலையிலும், உசியாவின் தான்தோன்றித்தனமான வாழ்வு, ஆசாரியர்களின் பணியைத் துச்சயமாய் எண்ணி தேவாலயத்தில் தூபம் காட்டி ஆலயத்தின் தூய்மைத் தன்மையினைச் சிதைக்கவே, கடவுளின் ஆதங்கக்குரல் கேட்ட ஏசாயா உணர்வு பெற்று, உடன்பட்டார். ஏலியின் காலத்தில் நடைபெற்றதுபோல் இன்று உலகில் பாவம் பெருகிற்று. போலியான சமய வெறிகொண்ட மக்கள். போலி பக்தி தரித்து ஆன்மிக வேடம் பூண்டு வாழ்ந்து வருகின்றனர். ஏசாயா தன் குறையை அறிக்கை செய்தபோது, சேராபீன்களில் ஒருவன் பிறந்து தனது கரத்தில் பிடித்த குறட்டால் நெருப்புத் தழலை எடுத்து வந்து அவர் வாயைத் தொட்டு பாவம் நீக்கவே, அருட்பணிக்கு அர்ப்பணித்து உடன்பட்டார்.

தமஸ்கு ரோட்டில் சிலுவையில் மரித்து பின் உயிர்த்த இயேசுவைச் சந்தித்த சவுல் மனமாற்றம் பெற தனது சுயம் சார்ந்த வாழ்வை விட்டு இறைச் சித்தத்திற்கு உடன்பட்டார். மூன்று அருட்பணிப் பயணங்கள் வழி திருச்சபைகள் உருவாயின. யோனா தீர்க்கர் தனது வழியினின்று இறைப் பாதைக்கு உடன்பட்ட போது வலது, இடது கைக்கு வித்தியாசம் தெரியாத பல பேர் மீட்கப்பட்டனர். நாமும் அருட்பணியின் தேவைதனை உணர்ந்து இறை சித்தத்திற்குட்பட்டு உடன்படும்போது ஆத்தும ஆதாயம் நடைபெறும். இறையரசு வளரும்.

## 3. உதவிடு (ஏசாயா 6 : 8)

உசியா மன்னரின் கீர்த்தி எல்லை கடந்து பரவிட, பெருமிதமும், ஆணவமும் கொண்டு தன் நிலை மறந்து எல்லை கடந்து செயலைச் செய்ய, ஆண்டவரின் கடும் சாபத்திற்குட்பட்டார். தனக்கு உரிமையற்ற ஆசாரியப் பணிவிடையினை 80 பலசாலியான ஆசாரியர்கள் தடுத்த பின்னரும் தனக்குக் கேடுண்டாகும் மட்டும் மன மேட்டிமையுடன் ஆண்டவருக்குத் தூபம் காட்ட, அவரது நெற்றியிலே குஷ்டரோகம் தோன்ற, ஆலயத்தை விட்டு வெளியேறத் தீவிரம் கொண்டார். ஆண்டவரின் ஆலயத்திற்கும் பிதாக்களின் வரிசைக்கும் புறம்பே தள்ளப்பட்டார். ஆனால் ஏசாயா தேவாலயத்தில் சென்ற போது தனது நிலையையும் தன்னைச் சார்ந்தோர் நிலையினையும் உணர்ந்து தூய்மைப்படுத்தும்படி உடன்பட்டார். எனவே அருட்பணிக்கு உதவிட தன்னை

“இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்” என்றார். பக்தியற்றோர் நடுவில் ஏசாயா, தீர்க்கராக கடவுளால் பயன்படுத்தப்பட்டார்.

நல்ல சமாரியன் அன்று, தன்னலம் துறந்து உதவி செய்தார். “அந்தபடியே நீயும் செய்”என குறிப்பிடும் ஆண்டவரைப்போல் எதிர்பாராத நிலையில் உதவ முன் வருவோமானால் இறையரசு உருவாகும், வளரும். எனவே நாம் நம்மைக் குறித்தும் இறைவனைக் குறித்தும் அறிந்து அருட்பணியின் தேவையினை உணர்வோம், உடன்படுவோம், உதவி செய்வோம். இறையரசு விரிவாக்கம் பெறட்டும்.

Rev.C. **ஜெபதுரை**
**சேகரத் தலைவர்**
**முதலூர் சேகரம்.**

## தேவை! தேவை!! தேவை!!!

குளோபல் மிஷனெரி சங்கத்தில் இணைந்து அபிவிருத்தி ஊழியம் செய்ய ஊழியர்கள் தேவை. தகுதியானவர்கள் அந்தந்த சேகரத் தலைவரிடம் பரிந்துரை கடிதம் வாங்கிக் கொண்டு வரவும்.

**பொதுக்காரியதரிசி**, GMS

## தேவை! தேவை!! தேவை!!!



குளோபல் மிஷனெரி சங்கத்தில் இணைந்து பணித்தளத்தில் குடும்பமாக தங்கியிருந்து மிஷனெரி ஊழியம் செய்ய ஊழிய வாஞ்சை மற்றும் அர்ப்பணிப்புள்ளவர்கள் தேவை. தகுதியானவர்கள் அந்தந்த சேகரத் தலைவரிடம் பரிந்துரை கடிதம் வாங்கிக் கொண்டு வரவும்.

**பொதுக்காரியதரிசி**, GMS

# பணித்தளச் செய்திகள்

## துதியுங்கள் / ஜெபியுங்கள்

### தருமபுரி மாவட்டம்
### நாகலூர்

**துதிக்க**

✳ மாற்கு மாதுலிங்கம் என்ற சகோதரருக்கு சுகர் அதிகமாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தும் சுகமாகாத நிலையில் ஜெபத்தின் மூலம் சுகர் குறைந்ததற்காக...

✳ சித்ரா என்ற சகோதரியின் மகன் ஜெபத்தின் மூலம் கம்பெனி கட்டி முடித்ததற்காக...

✳ இந்த மாதம் புதிதாக ஒரு நபர் ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்க்கப்பட்டதற்காக...

**ஜெபிக்க**

◈ விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்துகொண்ட 32 பிள்ளைகளும், பெற்றோர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக....

◈ அமுதா என்ற சகோதரியின் மகன் குடிப்பழக்கத்தை தேவன் விரைவில் மாற்றும்படியாக....

◈ ஆண்டிகவுண்டன் மற்றும் அஞ்சலா இவர்களுடைய குடும்பம் இரட்சிக்கப்படவும், விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படியாகவும்....

◈ ஞானஸ்நானம் எடுத்த மலர் என்ற சகோதரியின் கணவர் மனந்திரும்பும்படியாக....

**சகோதரர்.C. பவுல்விஸ்வநாதன்**

### ஜம்மனஹள்ளி

**துதிக்க**

✳ சம்பத் என்ற சகோதரருக்கு காணப்பட்ட வயிற்று வலி எண்ணெய் பூசி ஜெபித்தபோது பூரண சுகம் கிடைத்ததற்காக....

✳ தமிழன் என்ற சகோதரன் இருசக்கர வாகனம் ஓட்டும்போது எதிரில் வந்த இன்னொரு வாகனம் அவர் மீது மோதும் தருவாயில் கர்த்தர் பாதுகாத்ததற்காக....

**ஜெபிக்க**

◈ கல்பனா என்ற சகோதரிக்கு காணப்படும் சுகர், இரத்த அழுத்தம் விரைவில் குணமாகும்படியாக...

◈ பிரிந்து வாழும் சூர்யா - ராகுல் இவர்கள் குடும்பமாக இணைந்து வாழும்படியாக....

◈ மதியழகன், முனுசாமி, பிரகாசம், கோவிந்தன், சர்மா இவர்களின் குடிப்பழக்கத்தை கர்த்தர் விரைவில் மாற்றும்படியாக....

**சகோதரி. எஸ்தர் டேனியேல்**

## அடிமலைப்புதூர், பட்டுக்கோணம்பட்டி,சமத்துவபுரம்

**துதிக்க**



✳ கருப்பாயி என்ற சகோதரிக்கு கெட்ட கனவுகளினால் ஏற்பட்ட மரணப் பயத்தை ஜெபத்தின் மூலம் கர்த்தர் மாற்றி போட்டதற்காக....

✳ மேரி என்ற சகோதரியின் அண்ணன் மகனுக்கு 2 பெண் குழந்தைகள் பிறந்து ஒரு குழந்தை இறந்துவிட்டது. அடுத்த குழந்தையும் பிழைக்க வாய்ப்பில்லை என்றுமருத்துவர்கள் சொன்ன நிலையில் ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த ஜீவனுக்காக....

**ஜெபிக்க**



◈ புதிதாக ஆலயத்திற்கு வரும் சின்னத்தாயி,சின்னபாப்பா, பார்வதி, வெள்ளையம்மாள், குப்பம்மாள், கருப்பாயி, கிருஷ்ணவேணி இவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக....

◈ முத்தம்மாள், சாலாம்மாள் இவர்களின் கால் வலி சுகமாகும் படியாக....

◈ முருகம்மாள் வீடு காண்கிரட் போட பணத்தேவைகள் சந்திக்கப்படும் படியாகவும், விரைவில் வீடு கட்டி முடிக்கப்படும்படியாகவும்.....

**சகோ.R. சைமன் கண்ணன்**

## பெரும்பாலை, சாணார்பட்டி

**துதிக்க**



✳ ஆர்த்திக்கு ஜெபத்தின் மூலம் திருமணக்காரியத்தை கர்த்தர் ஏற்படுத்தி கொடுத்ததற்காக...

✳ நித்திஸ் என்ற சகோதரருக்கு ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த நல்ல வேலைக்காக....

✳ மரகதம் என்ற சகோதரி பேருந்தில் செல்லும்போது ஏற்பட்ட விபத்தில் கர்த்தர் எந்த சேதமும் இல்லாமல் பாதுகாத்ததற்காக....

**ஜெபிக்க**



◈ கஜேந்திரனுக்கு விரைவில் திருமணக் காரியத்தை கர்த்தர் ஏற்படுத்தி கொடுக்கும்படியாக.....

◈ மகாலட்சுமி என்ற சகோதரிக்கு முதுகு எலும்பு தேய்மானத்தினால் கஷ்டப்படுகிறார். விரைவில் நல்ல சுகத்தை கர்த்தர் கொடுக்கும் படியாக....

◈ சின்னசாமி என்ற சகோதரருடைய குடிப்பழக்கத்தை கர்த்தர் விரைவில் மாற்றும்படியாக...

**சகோதரி.சுமித்ராதமிழ்வாணன்**

## வடகரை, குருபரஹள்ளி. பாலசமுத்திரம்

**துதிக்க**

✳ இந்த மாதம் 6 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

✳ ஜெகதீசன் என்ற சகோதரர் தூர்வாரின கிணற்றில் ஜெபத்தின் மூலம் நல்ல தண்ணீர் ஊற்றை தேவன் கொடுத்தற்காக....

**ஜெபிக்க**

◈ விபத்து ஏற்பட்டு மருத்துவனையில் சிகிச்சை பெற்று வரும் முத்து என்ற சகோதரருக்கு விரைவில் நல்ல சுகம் கிடைக்கும்படியாக...

◈ அஞ்சுகம் என்ற சகோதரிக்கு நல்ல வரன் கிடைக்கவும், படிப்புக்கேற்ற வேலை கிடைக்கும்படியாகவும்...

◈ தேசியா என்ற சகோதரியின் குடும்பத்தில் பிரிவினையை மாற்றி ஒற்றுமையை கொடுக்கும்படியாக...

**சகோதரர். சங்கர் சைமன்**

## .வெங்கடசமுத்திரம், பாப்பிரெட்டிப்பட்டி

**துதிக்க**

✳ ஜெயமணி என்ற சகோதரி வேலைபார்த்து வந்த இடத்தில் கை விரல் மிஷினில் மாட்டிக் கொண்டது. கர்த்தர் அற்புதமாக பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றிய தற்காக....

✳ அலீஸ் என்ற சகோதரி வீசிங் பிரச்சனையினால் கஷ்டப்பட்டார். ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த பூரண சுகத்திற்காக.....

**ஜெபிக்க**

◈ விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்துகொண்ட பிள்ளைகள் அனைவரும் தொடர்ந்து ஆலயத்திற்கு வரும்படியாக....

◈ ரமேஷ் என்ற சகோதரருக்கு இழந்துபோன கம்பெனி வேலை மீண்டும் கிடைக்கும்படியாக....

◈ ஆபிரகாம் சரவணன் என்ற சகோதரரின் மகன் ஸ்டீபனுக்கு விரைவில் திருமணக்காரியத்தை கர்த்தர் ஏற்படுத்தி கொடுக்கும் படியாக.....

**சகோதரர்.C. செல்வமணி**

## கும்பாரஹள்ளி, கதிரிபுரம்

**துதிக்க**

✳ தங்கம்மாள் என்ற சகோதரியின் சீட்டுப் பணம் ஜெபத்தின் மூலம் பெற்றுக்கொள்ள தேவன் கிருபை செய்ததற்காக....

**ஜெபிக்க**

◈ தங்கவேல், அபி இவர்கள் சொந்த கடையை விட்டு விலகி போகாதபடி தேவன் இவர்களை பாதுகாக்கும் படியாகவும், ஆலயத்திற்கு வரும்படியாகவும்....

* இராணி என்ற சகோதரியின் குடும்ப பிரச்சனை மற்றும் இரண்டு மகன்களின் குடிப்பழக்கத்தையும் தேவன் மாற்றியதற்காகவும்....

◈ சின்னப்பாப்பா கனேசன் மற்றும் ரேவதி சரவணன் இவர்களுக்கு கர்த்தர் விரைவில் குழந்தை பாக்கியத்தை கொடுக்கும்படியாக....

**சகோ. சாமுவேல் சரவணன்**

## புதுக்கோட்டை சரடு



### துதிக்க

* நாகமணி என்ற சகோதரிக்கு பிசாசின் போராட்டத்திலிருந்து ஜெபத்தின் மூலம் கிடைத்த விடுதலைக்காக....
* ஊழியரின் மனைவிக்கு ஜெபத்தின் மூலம் கர்த்தர் சுகப்பிரசவத்தை கொடுத்ததற்காக...
* இந்த மாதம் 10 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க



◈ ஆறு ஆண்டுகளாக குழந்தை இல்லாமல் இருக்கும் விக்னேஷ், தனரதி தம்பதியினருக்கு விரைவில் கர்த்தர் குழந்தை பாக்கியத்தை கொடுக்கும்படியாக...

◈ முடக்கு வாதத்தால் கஷ்டப்படும் ஜெயசீலன் என்ற சகோதரருக்கு விரைவில் கர்த்தர் நல்ல சுகத்தை கொடுக்கும்படியாக....

**சகோ.N. அருண் பெஞ்சமின்**

## காளிப்பேட்டை



### துதிக்க:

* கோம்பூர், ஆவாரங்காட்டூர், மஞ்சவாடி, வரதகவுண்டனூர், நொணங்கனூர், கல்லாத்துப்பட்டி, காளிப்பேட்டைபுதூர், நடுப்பட்டி, தண்ணீர்தொட்டி, அம்மன்நகர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....
* மோகன் என்ற சகோதரரின் குடிப்பழக்கத்தை ஜெபத்தின் மூலம் கர்த்தர் மாற்றியதற்காக...

### ஜெபிக்க:



◈ விஜயராணி என்ற சகோதரியை இழந்து வாடும் பெருமாள் என்ற சகோதரருக்கு தேவன் ஆறுதலை கொடுக்கும்படியாக....

◈ காளிப்பேட்டை புதூர் பகுதியில் காணப்படும் மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக...

◈ கோபால் என்ற சகோதரர் கால் வலியினால் கஷ்டப்படுகிறார். விரைவில் சுகம் கிடைக்கும் படியாக....

**சகோ.ஸ்டீபன்(எ)புரட்சிவீரன்**

## பெத்தூர்

### துதிக்க

* குழந்தையம்மா என்ற சகோதரிக்கு காணப்பட்ட பயத்தின் ஆவி ஜெபத்தின் மூலம் மாறியதற்காக....
* புதிதாக சபைக்கு வரும் சத்தியா என்ற சகோதரி விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படியாக.....
* இந்த மாதம் 3 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக...

### ஜெபிக்க

- தேன்மொழி என்ற சகோதரிக்கு காணப்படும் பக்கவாத நோய் விரைவில் குணமாகும்படியாக....
- காங்கேயன் என்ற சகோதரருக்கு இரத்தக் குறைபாட்டிலிருந்து விரைவில் சுகம் கிடைக்கும் படியாக....
- ஸ்டீபன் தீர்த்தமலை அவர்களுக்கு அரசுக்கல்லூரியில் ஆசிரியர்பணி விரைவில் கிடைக்கும்படியாக....

**சகோ.R. கதிரேசன் ஸ்டீபன்**

## அரகாசனஅள்ளி

### துதிக்க

* சின்னபொன்னு என்ற சகோதரியின் கையில் காணப்பட்ட கட்டி ஜெபத்தின் மூலம் ஆப்ரேஷன் செய்ய தேவன் கிருபை செய்ததற்காக...
* விடுமுறை வேதாகப்பள்ளியில் சிறுபிள்ளைகள் மட்டுமல்லாமல் அவர்கள் பெற்றோர்களும் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்ததற்காக...

### ஜெபிக்க

- இந்திரா என்ற சகோதரியின் மகன் வளர்ச்சியடையவும், குடும்பத்தார் அனைவரும் இரட்சிக்கப்படும் படியாகவும்....
- ராஜ் தானு என்ற சகோதரருக்கு விரைவில் திருமணக்காரியத்தை கர்த்தர் ஏற்படுத்தி தரும்படியாக....

**சகோ.V. பிலவேந்தர்**

## மூக்காரெட்டிப்பட்டி

### துதிக்க

* கடந்த மாதம் 3 பணித்தளங்களில் விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்த தேவன் கிருபை செய்ததற்காக...
* 50-க்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு புதிய ஏற்பாடு கொடுக்க தேவன் கிருபை செய்ததற்காக...

### ஜெபிக்க

- விடுமுறை வேதாகமப் பள்ளி மூலம் சந்திக்கப்பட்ட 200 பிள்ளைகளும் இரட்சிக்கப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ளும் படியாக....
- புதிதாக சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படும் படியாக....

✳ இந்த மாதம் 10 கிராமங்களை சந்தித்தது சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

◈ சபை விசுவாசிகள் அனைவரும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கும்படியாக....

**சகோதரர். தனபால் மேத்யூ / சகோதரி.பவித்ரா மேத்யூ**

## வெங்கடசமுத்திரம்



### துதிக்க

✳ சின்னப்பாப்பா என்ற சகோதரி ஒன்றரை ஆண்டுகளாக எந்த வேலையும் செய்ய முடியாமல் பெலவீனத்தோடு காணப்பட்டார். ஜெபத்தின் மூலம் கிடைத்த சுகத்திற்காக....

✳ ஆலயத்தை விரிவு படுத்தவும், ஆலய பொருட்களை வைக்க ஸ்டோர் ரூம் கட்டவும் கிருபை செய்ததற்காக...

### ஜெபிக்க



◈ எஸ்தர் என்ற சகோதரிக்கு காணப்படும் வியாதிகள் மற்றும் பெலவீனங்களை தேவன் விரைவில் மாற்றி நல்ல சுகத்தை கொடுக்கும்படியாக....

◈ ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாயிருப்பவர்கள் அனைவரும் விரைவில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் படியாக...

**சகோதரர்.தே. சாம் அன்புராஜ்**

## சிடுவம்பட்டி



### துதிக்க

✳ அமுதா என்ற சகோதரியின் நிலப்பிரச்சனைகளை தேவன் ஜெபத்தின் மூலம் மாற்றியதற்காக....

✳ மனைவியை விட்டு பிரிந்து வாழ்ந்து வந்த செல்வம் என்ற சகோதரர் ஜெபத்தின் மூலம் சேர்ந்து வாழ தேவன் கிருபை செய்ததற்காக....

✳ பூபாலன் என்ற சகோதரரின் கடன் பிரச்சனைகளை தேவன் மாற்றியதற்காக...

### ஜெபிக்க



◈ புதிதாக சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக....

◈ ஊழியரின் மகன் திருமணத் தேவைகள் சந்திக்கப்படும்படியாக....

◈ கல்லூரியில் சேரும் விசுவாசி களுடைய பிள்ளைகளின் படிப்பு தேவைகள் சந்திக்கப்படும் படியாக....

**சகோதரர். D.N. அற்புதராஜ்**

## தாசர்குந்தி

### துதிக்க

* தற்கொலை செய்துகொள்ள திட்டமிட்ட லட்சுமி என்ற சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் அந்த எண்ணங்களை மாற்றிப்போட்டதற்காக....
* ராபின் என்ற சகோதரர் மரத்திலிருந்து கீழே விழுந்தும் எந்த ஆபத்தும் இல்லாமல் தேவன் பாதுகாத்ததற்காக....
* இந்த மாதம் 12 புதிய கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக.....

### ஜெபிக்க

- ஐஸ்கமயினூர் பகுதி மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும் படியாகவும், இந்த பகுதியில் விரைவில் ஒரு ஆலயம் கட்டப்படும்படியாகவும்....
- எர்ரகொல்லனூர் பகுதியில் மக்கள் கூடி ஆராதிக்க ஒரு ஜெப வீடு கிடைக்கும்படியாக...
- புதிதாக சுவிசேஷம் கேட்ட மக்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டு இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படியாக....

**சகோ.C.J. தேவாச்சாரியா**

## சிந்தல்பாடி, சி.பள்ளிப்பட்டி

### துதிக்க

* சுந்தர் என்ற சகோதரரின் கடன் பிரச்சனையை ஜெபத்தின் மூலம் கர்த்தர் மாற்றியதற்காக....
* இந்த மாதம் புதிய குடும்பங்களை சபைக்கு கர்த்தர் கொண்டு வந்ததற்காக....
* சி. பள்ளிப்பட்டி பகுதியில் இடம் வாங்கி ஆலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டதற்காக....

### ஜெபிக்க

- சரசு என்ற சகோதரியின் மகனுக்கு விரைவில் திருமணக்காரியத்தை கர்த்தர் ஏற்படுத்தி கொடுக்கும் படியாக.....
- சுந்தரி என்ற சகோதரியின் மருமகளுக்கு சுகப் பிரசவத்தை கர்த்தர் கொடுக்கும்படியாக...
- விஜயக்குமார் என்ற சகோதரரின் மகனுக்கு நல்ல ஒரு வேலை கிடைக்கும்படியாக....

**சகோதரர்.S. குமார்**

## கிருஷ்ணகிரி மாவட்டம்: போச்சம்பள்ளி, வடமலப்பட்டி

### துதிக்க



✳ செந்தில் என்ற சகோதரர் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு சபையில் சேர்க்கப்பட்டதற்காக....

✳ அன்பரசி என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் கர்த்தர் சுகப்பிரசவத்தை கொடுத்ததற்காக....

✳ பவுல் வெங்கடேசன் என்ற சகோதரருக்கு காணப்பட்ட மஞ்சள்காமாலை வியாதி ஜெபத்தின் மூலம் சுகமானதற்காக....

### ஜெபிக்க



◈ செல்வி என்ற சகோதரிக்கு சுகர் அதிகமானதால் காலில் புண் ஏற்பட்டு கஷ்டப்படுகிறார். விரைவில் சுகர் குறையவும், புண் ஆறும் படியாகவும்.

◈ ஆலயத்திற்கு வராமல் இருக்கும் அம்மு என்ற சகோதரி தொடர்ந்து ஆலயத்திற்கு வரும்படியாக....

◈ சித்ரா என்ற சகோதரியின் வீடு கட்டுமானப் பணிக்கான பணத்தேவைகள் சந்திக்கப்படும் படியாக....

**சகோ. S. எசேக்கியேல்ராஜா**

## கேரட்டி, ஒசட்டி

### துதிக்க



✳ ரூபா என்ற சகோதரிக்கு 5-வது முறையாக கருச்சிதைவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் அதிக இரத்த அழுத்தம் ஏற்பட்டு இருந்த சூழ்நிலையில் ஜெபத்தின் மூலம் கர்த்தர் ஜீவனை கொடுத்ததற்காக...

✳ பணித்தளத்தில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் 75-க்கும் அதிகமான பிள்ளைகள் கலந்து கொண்டதற்காக....

✳ ரூபா என்ற சகோதரியின் கணவருக்கு ஏற்பட்ட விபத்தில் கர்த்தர் பாதுகாத்ததற்காக....

### ஜெபிக்க



◈ அம்பிகா - முருகேஷ் இவர்கள் குடும்பத்தில் கர்த்தர் சமாதானத்தை கொடுக்கும் படியாகவும் மகனின் படிப்பிற்காகவும்....

◈ விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்து கொண்ட பிள்ளைகள் அனைவரும் தொடர்ந்து ஆலயத்திற்கு வரும்படியாக....

◈ புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கும்படியாக....

**சகோதரர்.G. பூபதி**

## சின்னார்

**துதிக்க**

- ✳ பெல்லடி என்ற பகுதியில் முதல் முறையாக விடுமுறை வேதாகபள்ளி நடத்த தேவன் கிருபை செய்ததற்காக....
- ✳ இந்த மாதம் 7 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

**ஜெபிக்க**

- ◈ பெல்லடி கிராமத்தில் மக்கள் கர்த்தரை ஆராதிக்க விரைவில் ஒரு ஆலயம் கட்டப்படும்படியாக....
- ◈ ஆட்டுக்காரன்கொட்டாயூர் பகுதியில் சிறுவர் ஊழியம் நடைபெற்று வருகிறது. அங்கு புதிதாக ஒரு ஜெபக்கூடுகை ஏற்படுத்த கர்த்தர் உதவி செய்யும்படியாக...

**சகோ.P. தர்மன்**

## கரியசந்திரம்

**துதிக்க**

- ✳ ஜெகல்ராணி என்ற சகோதரியின் மகளுக்கு நிலுவையில் இருந்த பட்டா ஜெபத்தின் மூலம் கிடைத்தற்காக...
- ✳ பூமிகா என்ற சகோதரியின் காலில் காணப்பட்ட புண் ஜெபத்தின் மூலம் குணமானதற்காக....

**ஜெபிக்க**

- ◈ ஐஸ்வர்யா என்ற சகோதரிக்கு பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை கிடைக்கும்படியாக....
- ◈ ராஜப்பா என்ற சகோதரருக்கு காணப்படும் சுகர் வியாதி விரைவில் குணமாகும்படியாக....
- ◈ மகேஷ் என்ற சகோதரிக்கு நல்ல மனநிலையை கொடுக்கும்படியாக...

**சகோ. ஜாண் வெங்கடேஷ்**

## சவுளூர்

**துதிக்க**

- ✳ பூம் பூம் மாட்டுக்காரர் மத்தியில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் 30 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காக...
- ✳ சென்றாயன் கிராமத்தைச் சேர்ந்த சின்னசாமி என்ற சகோதரரை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக...

**ஜெபிக்க**

- ◈ சத்யா, மலர் இவர்கள் குடும்பத்தில் உள்ள பிரச்சனைகளை தேவன் மாற்றி , குடும்பத்தில் சமாதானத்தை கர்த்தர் கொடுக்கும்படியாக....
- ◈ சாமுவேலுக்கு ஞனானஸ்நானம் எடுப்பதற்கு காணப்படும் தடைகளை தேவன் மாற்றி விரைவில் இவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் படியாக....

**சகோ. K. வேதசெல்வம்**

## திருப்பத்தூர் மாவட்டம்: பனந்தோப்பு



### துதிக்க

✳ கதிரேசன்,பானுமதி இவர்களுடைய கடன் பிரச்சனையை தேவன் மாற்றும்படியாக....

✳ பரமேஸ்வரி என்ற சகோதரிக்கு பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் கர்த்தர் விடுதலையை கொடுத்ததற்காக...

### ஜெபிக்க



◈ தாபோதிரன் என்ற சகோதரரின் வயிற்றில் காணப்படும் கட்டி விரைவில் குணமாகும்படியாக....

◈ தயாநிதி என்ற சகோதரருக்கு விரைவில் நல்ல ஒரு வேலை கிடைக்கும்படியாகவும், குடும்பத்தில் சமாதானம் கிடைக்கும் படியாகவும்....

◈ கனகா என்ற சகோதரிக்கு அடிக்கடி ஏற்படும் வயிற்று வலி விரைவில் சுகமாகும்படியாக....

**சகோதரர்.K. தாமஸ்**

## திரியாலம்



### துதிக்க

✳ அருணா என்ற சகோதரிக்கு காணப்பட்ட செய்வினைக் கட்டிலிருந்து ஜெபத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த விடுதலைக்காக...

✳ ஜெனிட்டா என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் கிடைத்த நல்ல வேலைக்காக....

### ஜெபிக்க



◈ சந்தியா என்ற வாலிப சகோதரி இரத்த அழுத்த குறைவினால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். விரைவில் நல்ல சுகம் கிடைக்கும்படியாக....

◈ கணவரை இழந்து காணப்படும் சரண்யா என்ற சகோதரிக்கு கர்த்தர் ஆறுதலையும், சமாதானத்தையும் கொடுக்கும்படியாக....

**சகோ.M. ராபின் வடிவேல்**

## ஜம்மணபுதூர்



### துதிக்க

✳ வீட்டு ஜெபக்கூட்டத்தில் ஐந்து பேர்கள் ஞானஸ்நானம் எடுக்க ஒப்புக்கொண்டதற்காக...

✳ இந்த மாதம் 11 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க



◈ அம்பிகா என்ற சகோதரியின் கணவருடைய குடிப்பழக்கம் மாறவும் 3 பிள்ளைகளும் ஞானஸ்நானம் எடுக்கவும்....

◈ ஜனனி என்ற சகோதரியின் சரீரத்தில் பெலவீனம், குழந்தை இருதயத்தில் ஓட்டை, கணவர் கைவிட்ட நிலை இவை மாறும்படியாக...

**சகோ.E. ஜாண் ஜெபமணி**

## சிந்தல்பாடி



### துதிக்க

✳ விசமங்கலம், மங்களப்பள்ளி கிராமங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் 60 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காக....

✳ இந்த மாதம் 9 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க



◈ விசமங்கலம், சென்னூர் பகுதிகளில் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேரும்படியாக....

◈ விடுமுறை வேதாகமப் பள்ளி மூலம் சந்திக்கப்பட்ட சிறுவர்கள் அனைவரும் தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளும்படியாக....

**சகோதரர்.P. பால்ராஜ்**

## கோவிந்தாபுரம்



### துதிக்க

✳ சரவணன் என்ற சகோதரருக்கு பாம்பு கடித்து விட்டது. விசுவாசத்தோடு ஜெபித்தபோது தேவன் நல்ல சுகத்தை கொடுத்ததற்காக....

✳ சுமதி என்ற சகோதரி ஆலயத்திற்கு வருகிறதற்கு அவர்கள் மாமியார் தடைசெய்தார்கள். ஜெபத்தின் மூலம் தேவன் தடைகளை மாற்றி ஆலயத்திற்கு வர தேவன் கிருபை செய்ததற்காக....

✳ இந்த மாதம் 8 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக...

### ஜெபிக்க



◈ வெங்கட்ராமன், எஸ்தர் இவர்கள் குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்படவும், அவர்களுடைய கடன் பிரச்சனையை தேவன் விரைவில் மாற்றும்படியாகவும்....

◈ சின்ன பாப்பா என்ற சகோதரியின் கணவருடைய குடியை கர்த்தர் விரைவில் மாற்றும்படியாகவும், அவர் இரட்சிக்கப்படும் படியாகவும்....

◈ சுமதி என்ற சகோதரியின் மூன்று பிள்ளைகளும், இரண்டு மருமகன்களும் இரட்சிக்கப்படும்படியாக....

**சகோ.D. அன்பழகன்**

## பொம்மிகுப்பம்



**துதிக்க**

✳ தீபா என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் அரசாங்க வேலை கிடைத்ததற்காக....

✳ சசிதர் என்ற சகோதரருக்கு ஜெபத்தின் மூலம் வீடு கட்ட தேவன் கிருபை செய்ததற்காக...

✳ லட்சுமி என்ற சகோதரியின் மார்பில் காணப்பட்ட கட்டி இரவு அமாவாசை ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபித்தபோது சுகமானதற்காக....

**ஜெபிக்க**



◈ வனிதா என்ற சகோதரியின் கணவருடைய குடியை கர்த்தர் விரைவில் மாற்றும்படியாக....

◈ கருணாநிதி என்ற சகோதரருக்கு வயிற்றில் இரணியா உள்ளது. இதை நல்ல முறையில் ஆப்ரேஷன் செய்யும்படியாக.....

◈ சுஜாதா என்ற சகோதரி வீடு கட்டுவதற்கு பணத்தேவைகள் சந்திக்கப்படவும், எதிர்ப்புகள் மாறும்படியாகவும்....

**சகோ.D. பாஸ்கர் ரெஃபிங்**

## கள்ளக்குறிச்சி மாவட்டம்: மரூர்/சின்னக்கொள்ளியூர்



**துதிக்க**

✳ மரூர் பணித்தளத்தில் வருடாந்திர கன்வென்ஷன் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்ததற்காக....

✳ சின்னக்கொள்ளியூர் பணித்தளத்தில் விடுமுறை வேதாகமப் பள்ளியில் 120 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காக...

✳ 8 புதிய கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....

**ஜெபிக்க**



◈ பிரசாந்த் என்ற சகோதரரின் குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட்டு சபையில் சேரும்படியாக.....

◈ விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்து கொண்ட அனைத்து சிறுவர்களும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக.....

◈ புதிதாக சுவிசேஷம் கேட்டவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்படியாக....

**சகோ.A. ஜெயபிரகாசம்**

## சங்கராபுரம்

**துதிக்க**

- ✳ திரிஷா என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் குழந்தை பாக்கியத்தை கர்த்தர் கொடுத்ததற்காக...
- ✳ ஜான்சி என்ற சகோதரியின் குடும்பத்தில் காணப்பட்ட கடன் பிரச்சனையை ஜெபத்தின் மூலம் கர்த்தர் மாற்றியதற்காக....

**ஜெபிக்க**

- ◈ புதிதாக சுவிசேஷம் கேட்ட அனைவரும் இரட்சிக்கப்பட்டு சபையில் சேரும்படியாக...
- ◈ எங்கள் பகுதியில் உள்ள நரிக்குறவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படியாக....

**சகோதரர்.S. ஆனந்தராஜ்**

---

## திருவண்ணாமலைமாவட்டம்: கனந்தம்பூண்டி

**துதிக்க**

- ✳ சாந்தி என்ற சகோதரியின் கணவருடைய சரீரத்தில் காணப்பட்ட பெலவீனங்களை ஜெபத்தின் மூலம் கர்த்தர் மாற்றி நல்ல சுகத்தை கொடுத்ததற்காக....
- ✳ பாஸ்கர் என்ற சகோதரரின் இருதயத்தில் காணப்பட்ட பிரச்சனைகள் ஜெபத்தின் மூலம் மாறியதற்காக....

**ஜெபிக்க**

- ◈ புதிதாக சுவிசேஷம் கேட்ட மக்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக....
- ◈ எங்கள் பகுதியில் உள்ள நரிக்குறவர்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படியாக....

**சகோதரர்.P. ஜெயபால்**

---

## தாமரைநகர்

**துதிக்க**

- ✳ பால்கார்த்திக் என்ற சகோதரருக்கு ஜெபத்தின் மூலம் காவல் துறையில் உயர் பதவி கிடைத்ததற்காக....
- ✳ திருவண்ணாமலை, தாமரைநகர் பகுதியில் நடைபெற்ற விடுமுறை

**ஜெபிக்க**

- ◈ மாடம்பூண்டி பகுதியில் 3-ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் பொடி, புகையிலை என்ற பழக்கத்திற்கு அடிமையாயிருக்கிறார்கள். இந்த அடிமைத்தனம் விரைவில் மாறும்படியாக....

வேதாகமப் பள்ளியில் 26 சிறுவர்கள் கலந்து கொண்டதற்காக....

- ✳ இந்த மாதம் 7 கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக.....

- ◈ ஜாக்குலின் என்ற சகோதரியின் மகன் தனது தவறான தொடர்பினால் தாயை புறக்கணித்து கொடுமை செய்யும் நிலை விரைவில் மாறும்படியாக.....

**சகோதரர்.Y. ஞானராஜ்**

---

## மாடம்பூண்டி

### துதிக்க



- ✳ வரகூர், செட்டிபட்டி, எக்ஸ் ரோடு பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக....
- ✳ மாடம்பூண்டி பணித்தளத்தில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளியில் 80 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காக....

### ஜெபிக்க



- ◈ பணித்தளத்தில் ஊழியத்திற்கு விரோதமாக எழும்பும் மக்கள் அனைவரும் மனந்திரும்பும் படியாக....
- ◈ கௌசல்யாவுக்கு அடிக்கடி ஏற்படும் சுவாச கோளாரிலிருந்து விரைவில் நல்ல சுகம் கிடைக்கும்படியாக....

**சகோ.I. வேங்கையன்**

---

## விழுப்புரம் மாவட்டம் கொள்ளுமேடு

### துதிக்க



- ✳ கொள்ளுமேடு, ராயநல்லூர், நாகல்பாக்கம், குரும்பரம் ஆகிய நான்கு இடங்களில் விடுமுறை வேதாகப் பள்ளி நடத்த தேவன் கிருபை செய்ததற்காக.....
- ✳ ராயநல்லூர், நாகல்பாக்கம் கிராமங்களில் ஊழியத்திற்கு திறந்த வாசலை தேவன் தந்ததற்காக....

### ஜெபிக்க



- ◈ சுவிசேஷ ஊழியத்தில் துணையாக இருந்து வரும் சாம் கஜபதி அவர்கள் குடும்பத்தில் சமாதானத்தை தேவன் கொடுக்கும்படியாக....
- ◈ பெருமாள்-லட்சுமி தம்பதியருக்கு கர்த்தர் விரைவில் குழந்தை பாக்கியத்தை கொடுக்கும்படியாக....
- ◈ ராயநல்லூர், நாகல்பாக்கம் கிராமங்களில் ஆராதனை நடத்துவதற்கு நல்ல ஒரு இடம் கிடைக்கும்படியாக...

**சகோதரர்.D.மோசஸ்அந்தோணி சேவியர்**

---

## சேலம் மாவட்டம்
## ஓலப்பாடி



### துதிக்க

✳ செல்வராஜ் என்ற சகோதரரின் மனைவிக்கு இரத்தக் குறைபாட்டினால் ஏற்பட்ட சரீர பெலவீனங்கள் ஜெபத்தின் மூலம் சுகமானதற்காக....

✳ செய்வினைக் கட்டினால் இரவில் தூங்காமல் கஷ்டப்பட்ட செல்வபாரதிக்கு ஜெபத்தின் மூலம் நல்ல தூக்கத்தை கொடுத்ததற்காக...

✳ செல்வராஜ் என்ற சகோதரர் தன்னுடைய இரண்டு பிள்ளைகளையும் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்ததற்காக....

### ஜெபிக்க



◈ சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கும் பங்குஜம் என்ற சகோதரிக்கு விரைவில் சுகம் கிடைக்கும்படியாக...

◈ ஜான்சி, வின்சி, வாணி என்ற சகோதரிகளுக்கும் விரைவில் குழந்தைப் பாக்கியத்தைக் கொடுக்கும்படியாக....

◈ தனலட்சுமி என்ற சகோதரியின் அண்ணன் மாணிக்கம் என்ற சகோதரர் உடல்நிலை சரியில்லாமல் மரணத்தருவாயில் இருக்கிறார். விரைவில் பூரண சுகம் கிடைக்கும்படியாக....

**சகோ.V. ராஜேஷ்குமார்**

## பூசாரிபட்டி



### துதிக்க

✳ மணியக்காரம்பட்டி பகுதியில் ஊழியத்திற்கு காணப்பட்ட எதிர்ப்பை ஜெபத்தின் மூலம் கர்த்தர் மாற்றி ஊழியத்திற்கு திறந்த வாசலை தேவன் தந்ததற்காக....

✳ கீதா, சசிகுமார், உஷா, அபிசா, செர்சா, சபியா இவர்கள் விடுமுறை வேதாகமப் பள்ளியில் ஆசிரியர்களாக ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்ததற்காக....

### ஜெபிக்க



◈ கஸ்தூரி என்ற சகோதரிக்கு கர்ப்பபை ஆப்ரேஷன் செய்ததால் பக்க விளைவினால் அதிகமாக கஷ்டப்படுகிறார். விரைவில் நல்ல சுகம் கிடைக்கும்படியாக....

◈ விடுமுறை வேதாகமப் பள்ளி மூலம் சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படியாக...

**Rev.P.எபினேசர்**

வாலிபர் பகுதி

# விழிப்புணர்வும் கல்வியும்

**விழிப்புணர்வை நோக்கிய பயணமே கல்வி.**

**-அப்துல்கலாம்**

அன்பு தம்பி தங்கைகளே புதிய கல்வியாண்டு ஆரம்பித்து ஒரு மாதமாகி விட்டது. புதிய வகுப்பறை புதிய ஆசிரியர்கள், புதிய நட்புகள் என எல்லாம் புதிதாயின. கல்லூரி கல்விக்காகக் காத்திருக்கும் மாணவச் செல்வங்களுக்கு விரும்பிய கல்லூரியில், விரும்பிய துறையில் சேர வாழ்த்துக்கள்.

அன்பு மாணவ மாணவியரே! உங்கள் நட்பு வட்டத்தைத் தேர்ந்தெடுப்பதில் விழிப்புணர்வோடிருங்கள். குறிப்பாக பெற்றோரை விட்டு விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பக்தியுள்ள நன்றாக படிக்கும் மாணவ/மாணவியருடன் நட்பு பாராட்டும்போது பிரச்சனைகள் ஏதும் உங்களை அணுகாது.

போதைப் பழக்கம், இணையதள பாவங்களில் சிக்கி கல்வியைத் தொலைத்து விடாதீர்கள். கல்வியில் மட்டும் உங்கள் சிந்தனை இருக்குமாயின் உங்கள் எதிர்காலம் ஒளிமயமாக இருப்பதோடு உங்கள் பெற்றோரும் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். பள்ளியிலோ, கல்லூரியிலோ, ஜாதிப் பிரச்சனைகள், மதமொழி பிரிவினைகள், கலவரங்களிலிருந்து விலகி உயிரைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கடினமாக உழைத்துப் படித்து நீங்கள் தேர்வில் பெறும் மதிப்பெண்களும், பட்டங்களும் உங்களை வெற்றிப் படியில் நிற்க வைத்து எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்கும். அன்பு பிள்ளைகளே! மருத்துவப் படிப்பு மட்டுமே மதிப்பு மிக்கதென நினைக்கிறீர்களா? அதை விட மதிப்பு மிக்க பதவிகளைத் தரும் படிப்புகள் எத்தனையோ கொட்டிக்கிடக்கின்றன. தேவ சித்தம் அறிந்து நல்ல படிப்பைத் தேர்ந்தெடுத்துப் படித்து வாழ்வில் சுகித்திருங்கள்.

நாம் பெற்ற கல்வி சமுதாயத்தில் விழிப்புணர்வை விதைப்பதாக இருக்க வேண்டும். ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும். ஞானம், கல்வி, கடின உழைப்பு, ஒழுக்கநெறி ஒரு மனிதனை சிறந்த தலைவனாக உயர்த்தும்.

உலகத்தில் மாற்றத்தைக் கொண்டுவர நீ பயன்படுத்தக் கூடிய வல்லமையான ஆயுதம் கல்வியாகும்.

-நெல்சன் மண்டேலா.

**திருமதி. ஜெபா நியூட்டன்.**

# பணித்தள தேவைகள்

## தருமபுரி மாவட்டம்:

### புதுக்கோட்டை சரகு பணித்தளம்:

1. 300 அடிக்கு ஆழ்துளை கிணறு போட வேண்டும்.

### பட்டுக்கோணம்பட்டி பணித்தளம்:

1. மிஷனெரி வீடு கட்டப்பட வேண்டும்.
2. ஆலயம் சுற்று சுவர் கட்டப்பட வேண்டும்.

### அடிமலைபுதூர்:

1. ஆலயம் பழுது பார்க்கப்பட வேண்டும்.
2. மிஷனெரி வீடு பழுது பார்க்கப்பட வேண்டும்.

### சமத்துவபுரம்:

1. இடம் வாங்கி ஆலயம் கட்டப்பட வேண்டும்
2. ஆலயத்திற்கு கொட்டு தேவைப்படுகிறது.

### அரகாசனஹள்ளி பணித்தளம்:

1. மிஷனெரி வீடு கட்டப்பட வேண்டும்.
2. ஆலயத்திற்கு மின் இணைப்பு, தண்ணீர் தேவைப்படுகிறது.

### பெத்தூர் பணித்தளம்:

1. ஆலயத்தின் அருகில் போர்வெல் போட வேண்டும்.
2. மிஷனெரி இல்லத்தில் புதிய மின் இணைப்பு வாங்க வேண்டும்.
3. ஆலய வளாகத்தில் தளம் அமைத்து மேற்கூரை போடவேண்டும்.
4. ஆலயத்திற்கு குடிநீர் குழாய் இணைப்பு தேவைப்படுகிறது.

### மூக்காரெட்டிப்பட்டி பணித்தளம்:

1. மிஷனெரி வீடு பழுது பார்க்கப்பட வேண்டும்.

### வெங்கடசமுத்திரம் பணித்தளம்:

1. சுவிசேஷம் அறிவிக்க Stranger (or) Megaphone தேவைப்படுகிறது.
2. பெரிய வேதாகமம் தேவைப்படுகிறது.
3. ஞாயிறு பாடசாலைக்கு வரும் பிள்ளைகளுக்கு பரிசு கொடுக்க வசனபோர்டு, கீ செயின், ஸ்டிக்கர்ஸ் தேவைப்படுகிறது.
4. அறிவிப்பு பலகை புதிதாக வைக்கப்பட வேண்டும்.
5. விடுதலையின் கீதங்கள் அல்லது ஜெபத்தோட்ட பாடல் புத்தகம் 20 தேவை.

## காவிப்பேட்டை பணித்தளம்:

1. குடிநீர் மோட்டார் பழுது பார்க்க வேண்டும்.

2. ஆலயத்தை சுற்றிலும் மதில் சுவர் கட்ட வேண்டும்.

## பாப்பிரெட்டிப்பட்டி பணித்தளம்:

1. மிஷனெரி வீடு பழுது பார்க்கப்பட வேண்டும்.

## வடகரை பணித்தளம்:

1. LED சிலுவை தேவைப்படுகிறது.

2. ஆலயத்திற்கு கொட்டு தேவைப்படுகிறது.

3. ஆல்டர் மேஜை துணி தேவைப்படுகிறது.

## குருபரஹள்ளி பணித்தளம்:

1. ஆலயத்திற்கு கொட்டு, கீபோர்டு தேவைப்படுகிறது.

2. அகுஜா ஸ்பீக்கர் தேவைப்படுகிறது.

3. குஷன் (திருவிருந்து மண்டியிட) தேவைப்படுகிறது.

## சாணார்பட்டி - சோழிக்கவுண்டனூர் பணித்தளம்:

1. ஆலயம் பழுது பார்க்கப்பட வேண்டும்.

## கிருஷ்ணகிரி மாவட்டம்:

## வடமலம்பட்டி - போச்சம்பள்ளி பணித்தளம்:

1. ஆலயம் பழுது பார்க்கப்பட வேண்டும்.

2. ஊழியருக்கு இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது.

## சின்னார் பணித்தளம்:

1. ஸ்டேன்ஜர் தேவைப்படுகிறது.

2. டார்ச் லைட் ஒன்று தேவைப்படுகிறது.

## கரியசந்திரம் பணித்தளம்:

1. ஆம்ப் தேவைப்படுகிறது.

2. 10 சேர் தேவைப்படுகிறது.

3. கொட்டு ஒன்று தேவைப்படுகிறது.

## திருப்பத்தூர் மாவட்டம்:

## பனந்தோப்பு பணித்தளம் - பிரசன்ன ஆலயம்

1. ஆலயத்திற்கு அருகில் மிஷனெரி வீடு கட்டப்படவேண்டும்.

2. ஆலயத்தின் பலிபீடம் பழுது பார்க்கப்பட வேண்டும்.

3. விடுதலை கீதங்கள் 20 தேவைப்படுகிறது.

4. மர நாற்காலி 2 தேவைப்படுகிறது.

5. புள்பட் 1 தேவைப்படுகிறது.

## விசமங்கலம் - சென்னூர் பணித்தளங்கள்:

1. ஆலயத்தின் அருகில் மிஷனெரி வீடு கட்டப்படவேண்டும்

2. கிராம ஊழியம் செய்ய ஒரு மெகாபோன் தேவைப்படுகிறது.

## ஜம்மணபுதூர் - புதூர் பூங்குளம் பணித்தளங்கள்:

1. புதூர் பூங்குளம், திம்மனாமுத்தூர் பணித்தளங்களில் ஆலயம் தேவை

2. மிஷனெரி இல்லம் புதுப்பிக்கப்பட வேண்டும். தண்ணீர் தேவைப்படுகிறது.

## திரியாலம் பணித்தளம்:

1. கீ போர்டு தேவைப்படுகிறது.

## கோவிந்தாபுரம் பணித்தளம்:

1. போர்வெல் தேவைப்படுகிறது.

2. ஆலயத்தை சுற்றி காம்பவுண்டு வேலி மற்றும் கேட் போடவேண்டும்.

3. ஆலயத்திற்கு பாய்கள், சேர்கள் தேவைப்படுகிறது.

4. இரண்டு மைக் தேவைப்படுகிறது.

5. ஆலயத்திற்கு பெயிண்டிங் அடிக்க வேண்டும்.

6. மிஷனெரி இல்லத்திற்கு சர்வீஸ் வாங்க வேண்டும்.

7. கிராம ஊழியத்திற்கு மெகா போன் வாங்க வேண்டும்.

## பொம்மிக்குப்பம் பணித்தளம்:

1. மிஷனெரி இல்லம் தேவைப்படுகிறது.

2. ஆலய வளாகத்தில் போர் போட வேண்டும்.

## கல்லாறு பணித்தளம்:

1. சுவிசேஷ ஊழியத்திற்கு ஸ்டரேஜ்சர் தேவைப்படுகிறது.

## சேலம் மாவட்டம்:

## பூசாரிப்பட்டி பணித்தளம்:

1. மிஷனெரி வீடு பழுது பார்க்கப்படவேண்டும்.

## ஓலப்பாடி பணித்தளம்:

1. ஆலயத்திற்கு 20 சேர்கள் தேவைப்படுகிறது.

2. பாடல் புத்தகம் 20 தேவைப்படுகிறது.

3. காணிக்கைப் பை ஒன்று மற்றும் சிறிய மேஜை ஒன்று தேவைப்படுகிறது.

4. ஒரு பெரிய வேதாகமம் மற்றும் 30 துண்டு பிரதிகள் தேவைப்படுகிறது.

# அம்மாவின் அன்புக் கட்டளைகள் - பத்து

1. தினமும் மூன்று நேரம் தனி ஜெபம் செய். காலையில் கிருபை கேள். மத்தியானம் 12 மணி தனி ஜெபத்தில் தானியேலைப் போல முழங்காற்படியிட்டு இயேசப்பாவிடம் நிதானமாகப் பேசு. இரவில் துதி சொல்லி ஜெபி. அப்போது சிங்கத்தின் வாயைக் கட்டிப்போட்ட தேவன், சிங்கத்தைப் போல சுற்றித் திரியும் சாத்தானின் வாயைக் கட்டிப்போட்டு விடுவிப்பார். பாதுகாப்பார். நித்தமும் உன்னை வழி நடத்துவார்.
2. காலையிலும் இரவிலும் பாட்டுகள் பாடி, வேதபகுதி வாசித்து குடும்ப ஜெபம் செய்ய வேண்டும். குடும்பத்தினர் ஒவ்வொருவரும் ஒரு நாள் குடும்ப ஜெபத்தில் ஜெபிக்க வேண்டும்.
   (The Family Prayes together stays together)
3. தசமபாகக் காணிக்கை தனியாக ஒரு டப்பாவில் எடுத்து வை. அதில் இருந்து ஆலயத்துக்கும், ஊழியங்களுக்கும், சிறுமைப் பட்டவர்களுக்கும், தேவை உள்ளவர்களுக்கும் மனப்பூர்வமாகக் கொடு. மல்கியா 3 : 10-ன் படி இடங்கொள்ளாமல் போகுமட்டும் ஆசீர்வதிப்பார். இது உறுதியான அனுபவ உண்மை.
4. ஒரு வாரத்தில் ஒருநாள் உபவாசம் இருந்து குடும்பத்துக்காகவும், சபைக்காகவும், ஊழியங்களுக்காகவும், ஆத்துமாக்களுக்காகவும் ஜெபி. உபவாசிக்கும்போது, மற்ற வேலைகளை ஒதுக்கி விட்டு பாட்டு பாடி ஜெபி. ஆவிக்குரிய புத்தகங்கள், கிறிஸ்தவ பத்திரிக்கைகள் வாசி. ஏசாயா 58-ம் அதிகாரம் கட்டாயம் வாசி.
5. முதலாவது தேவனைத் தேடு - அதிகாலையில் எழும்பி வேதத்தை வாசித்து, தியானி. ஜீவ வசனங்கள் உன்னோடே பேசும், உணர்த்தும், தேற்றும், வழி காட்டும் வேத புத்தகமே விலையேறப்பெற்ற செல்வம். சிட்சித்து உம்முடைய வேதத்தைக் கொண்டு போதிக்கின்ற மனுஷன் பாக்கியவான். சங்க 94 : 13.
6. கர்த்தரை எப்போதும் துதி - நன்மையில் மட்டும் அல்ல - தீமையிலும் துதி, ஏனெனில் ரோமர் 8 : 28-ன் படி சகலமும்

நன்மைக்கே. பிரச்சனை நேரத்தில் முறுமுறுக்காமல் துதித்துப்பார். துதியின் வல்லமை வெளிப்படும். அதிசயங்களைக் காண்பாய். துதிக்கும்போது கவலை நீங்கி மகிழ்ச்சி உண்டாகும். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாய் இரு. அவரே உன் இருதயத்தின் வேண்டுதல்களை அருள் செய்வார். சங் 37: 4.

7. எப்போதும் இயேசுவை சந்திக்க ஆயத்தமாக இரு. இரண்டாம் வருகையில் மாத்திரம் அல்ல. அதற்கு முன்பே உன் (அழைப்பு) மரணம் வந்தாலும் உன் நேசர் இயேசுவை நீ சந்திக்கலாம் என்றும் அவரோட வாழலாம்! வருகைக்கு முன்பே மரண அழைப்பு வந்து நம் முன்னோர்களை நினையாத நேரத்தில் அவரிடம் கொண்டு சேர்த்து விட்டதே. எனவே எப்போதும் ஆயத்தமாக இரு. மத்தேயு 24 :42,43,44.

8. கர்த்தர் செய்த நன்மைகளை, சபை நடுவில் மட்டும் அல்லாமல், குடும்பத்தாரிடமும் அண்டை அயலகத்தாரிடமும் எப்போதும் சாட்சியாகச் சொல்லி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்து. ஏசயோ 42 : 8

9. மாதத்தில் ஒரு முறையாவது தகுந்த ஆயத்தத்துடன், தாழ்மையுடன், ஜெபத்துடன் பரிசுத்த நற்கருணை ஆராதனையில் பங்கு எடு. அப்போது ஆத்துமாவிலும், சரீரத்திலும் புதுபலன் உண்டாகும் தீராத வியாதிகள் சுகமாகும். ஞாயிறு தோறும் கட்டாயம் ஆலய ஆராதனைக்கு சென்று கருத்தாய் ஜெபி. ஏசாயா 58 : 14 - யாத். 20 : 8-11.

10. தவறாமல் தாய்மார் ஐக்கிய சங்க கூட்டங்களில் பங்கு கொள். அப்போது நற்கனி தரும் திராட்சைக் கொடியாய் வீட்டிலும், சபையிலும் சிறந்து விளங்குவாள். யோவான் 15-ம் அதிகாரத்தின் படி கொடியானது கிறிஸ்துவின் நிலைத்திருந்து அதிகமான, அருமையான, கனிகளைக் கொடுக்க இதுவே சிறந்த வழி.

**திருமதி. சொர்ணம் பால் நாயகம்**
**சாயர்புரம்.**

ஜுன் - 2026
வேத வினா போட்டி

சரியான விடைகள்

போட்டி
எண் :127

1. லேவியராகமம் 27 : 3
2. லேவியராகமம் 27 : 20
3. லேவியராகமம் 26 : 2
4. லேவியராகமம் 25 : 10
5. லேவியராகமம் 24 : 11
6. லேவியராகமம் 22 : 23
7. லேவியராகமம் 24 : 2
8. லேவியராகமம் 26 : 19
9. லேவியராகமம் 24 : 6
10. லேவியராகமம் 21 : 21

## ஜுன் மாதம் சரியான விடை எழுதியர்கள் போட்டி எண்: 127

**தூத்துக்குடி:** மேரி ராஜம்மாள், ஷீபா செல்வி, லீலா டேவிட்சன், கலாவதி விக்டர், பாலின் சுதாகர், பொன்மணி டேனியேல், டார்லிங் தங்கராஜ், சுந்தரவதி ஞானம், ஹனிட்டா, பொன்பரிமளா செல்வி, டெய்சி ராணி. **நாசரேத்:** ரூபவல்யா, சாந்தகுமாரி, நிமிஜா சாமுவேல், மார்ஜெரி மர்காஷியஸ், செல்வி ஹெப்சிபா, ஜேசுவடியாள் செல்வின், ராணி, ஜுலி செல்வின். **மெஞ்ஞானபுரம்:** ஜெயசீலி, ரவீந்திரா ஜோசப், பியூலா பஞ்சபதி. **ஆனைமலை:** ஜான்சி. **சென்னை:** தேவநேசம் ராஜாசிங், சுந்தரபாய், பிளாரனஸ் சித்தர். **கோவில்பட்டி:** நவரோஜி வீரபாண்டியன், தெய்வானந்தம், பியூலா தனம். **வகுத்தான்குப்பம்:** மல்லிகா. **சாயர்புரம்:** ஜுனியா மெர்சி. **திருச்சி:** ஜெபசீலி ஜெயக்கொடி. **பாண்டிச்சேரி:** பியூலா ஜெசுராஜன். **வெள்ளாளன்விளை:** சுசிலா ஜாண், பிரேமாவதி. **சத்தியநகரம்:** தேவகிருபை. **வடக்கு ஆத்தூர்:** ஏஞ்சல் ஞானமணி. **குரும்பூர்:** ஜெயராணி. **பண்டாரஞ்செட்டிவிளை:** ஜெயா தேவதுரை, ஷைபனா சோபிதா, சுலோச்சனா, ஞானசீலி ரண்டல். **புதுக்கோட்டை:** கிறிஸ்டி ஜெயபால். **உடன்குடி:** கோயிலம்மாள். **கண்காணியார்புரம்:** ஜுலியானா அற்புதராஜன். **ஆனந்தபுரம்:** சரோஜினி ஸ்டீபன். **நெடுங்குளம்:** எமி பர்னபாஸ். **சாத்தான்குளம்:** ஜோதி மனோகரன், லதா நெல்சன், ஜெபக்கனி அன்னாள், சுகுணாபாய் நோவா, ஜோஷன் ஜெபா, ரெத்னாவதி முத்துராஜ். **முறப்பநாடு:** ஜெனிபர் சாம். **தருமபுரி:** ரூத் விஜயகுமார். **காட்டுவளவு:** கீதா சார்லஸ். **கோரம்பள்ளம்:** தமிழரசி செல்லத்துரை, நான்சி தர்மராஜ். **நாகலாபுரம்:** பியூலா தனராஜ். **கோயம்புத்தூர்:** கிறிஸ்டிபாய் வாசன். **குளத்துக்குடியிருப்பு:** செல்லம்மாள் ஞானையா. **பிள்ளையன்மனை:** ஷேபா கோயில்பிச்சை. **கொட்டங்காடு:** மஞ்சுளா. **பழங்குளம்:** முத்தம்மாள் துரைராஜ். **திருநெல்வேலி:** ரூத் ஜெயராணி அன்புராஜ், ஜெபா நியூட்டன், ஜேன் லோகராமராஜ். **திசையன்விளை:** பால்துரை. **நல்லூர்:** செல்வி தேவராஜன், அலீஸ், ஜெபா ராஜசேகர், மார்கரேட் செல்வகுமார், ரெஜினா வின்செண்ட். **முதலூர்:** சந்திரா ஜெயசிங். **அழகப்பபுரம்:** லலிதா கோயில்பிச்சை. **ஒட்டன்சத்திரம்:** பொற்செல்வி பால்ராஜ். **கருங்கடல்:** எப்சிபா ஜெரின், இம்மானுவேல், அனிதா கிளாடிஸ். **மூக்குப்பீறி:** டோரா

## ஜுன் - 2026 பரிசு பெற்றவர்கள்

குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

1. திருமதி. மார்கரெட் செல்வகுமார் - நல்லூர்
2. செல்வி. அனித்தா கிளாடிஸ் - கருங்கடல்
3. திருமதி. மல்லிகா - வகுத்தான்குப்பம்

# திருமறையில் தேடுவோம்

## ( எண்ணாகமம் 1 முதல் 10 வரை)

வேத வினா
போட்டி எண் - 128
ஜுலை-2026

**கேள்விக்கு ஏற்ற பதில் எழுதவும்:-**

1. எந்த கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள் அதிகமாக இருந்தார்கள்?
2. கர்த்தருடைய கட்டளைப்படி எந்த கோத்திரம் எண்ணப்படவில்லை?
3. ஆரோனுடைய குமாரரில் பிள்ளைகள் இல்லாமல் இருந்தவர்கள் யார்? யார்?
4. கர்த்தர் லேவியருக்குள் எந்த கோத்திரம் அழிந்து போகாதபடி பார்க்கச் சொன்னார்?
5. எரிச்சலின் காணிக்கையாக என்னென்ன செலுத்தப்படவேண்டும்?
6. கர்த்தருக்கு பரிசுத்தமாயிருப்பான் யார்?
7. வண்டில்கள் கொடுக்கப்படாத கோத்திரம் எது?
8. 50 வயதிற்கு மேற்பட்ட லேவியருக்கான பணி என்ன?
9. ஒரு வெள்ளிப் பூரிகையை ஊதினால் என்ன செய்ய வேண்டும்?
10. "எங்களுக்கு கண்களைப் போல இருப்பாய்" என்று யாரை பற்றி சொல்லப்பட்டது?

அனுப்ப வேண்டிய முகவரி தயவு செய்து வெட்டி ஒட்டவும்

தொடர்புக்கு :
போன் : 0461 - 2328911

Question Answer
**Global Missionary Society**
368/11, W.G.C. Road, Opp. Telegraph Office
Thoothukudi - 628 001

## குறிப்பு

- பதில் எழுதுபவர்கள் சரியான இடத்தையும் சரியான வார்த்தையையும் எழுத வேண்டும்.
- ஒன்று இரண்டு வார்த்தையில் மட்டும் பதில் இருக்க வேண்டும்.
- தலைப்பும் மாதமும் எழுதவேண்டும்.
- போஸ்ட் கார்டில் எழுத வேண்டாம்.
- 25.07.2026-க்குள் விடைகள் வந்து சேர வேண்டும். அதற்குப் பின்வரும் பெயர்கள் பிரசுரிக்கப்படமாட்டாது.
- பதில் எழுதுகிற தாளில் உங்கள் முகவரியையும், தொலைபேசி எண்ணையும் தெளிவாக எழுத மறக்க வேண்டாம்.

இரட்சிப்பை பிரசித்தப் படுத்துபவர்களின் வரிசையில் உங்கள் மிஷனெரி

01

## சகோ.
# P. பால்ராஜ் குடும்பம்



என் பெயர் பால்ராஜ். நான் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகா, வானாரம்பட்டி கிராமத்தில் ஒரு வைராக்கியமான இந்து குடும்பத்தில் பிறந்தவன். நான் பின்பற்றி வந்த மத வழிபாட்டில் அதிக நம்பிக்கை உடையவன். பள்ளி படிப்பை முடித்து **ITI** படித்துள்ளேன். 1978-ம் ஆண்டு ஒரு சுவிசேஷ குழு எங்கள் கிராமத்திற்கு வந்து அறிவித்த சுவிசேஷத்தின் மூலம் முதல் முதல் இயேசுவை அறிந்துகொண்டு பின்பு 14 ஆண்டுகள் கழித்து ஒரு மில்லில் வேலை பார்க்கும் போது என்னுடைய நண்பர் மூலம் ஆண்டவர் இயேசுவை இன்னும் அதிகமாய் அறியவும் சபை ஆராதனையில் பங்குபெறவும் அதன் மூலம் இரட்சிப்பின் அனுபத்தை பெற்று திருமுழுக்கு பெறவும் ஆண்டவர் கிருபை செய்தார். பின்பு அந்த திருச்சபையின் போதகர் மூலம் ஊழிய அழைப்பு எனக்கு இருக்கிறது என்பதை அறிந்து முழுமையாக ஒப்புக் கொடுத்து **Campus Crusade** இயக்கத்தில் இணைந்து ஊழியத்தோடு ஊழிய பயிற்சியும் பெற்றுக்கொண்டேன். ஓமலூர், நாமக்கல், சேலம்,

தருமபுரி ஆகிய பகுதிகளில் ஊழியம் செய்து பின்பு 1992-ல் **UCMSI** என்ற மிஷனெரி இயக்கத்தில் இணைந்து மிஷனெரி ஆக பணி செய்து பின்பு 1999-ஆம் ஆண்டு நமது ஊழியத்தின் தொடக்க ஊழியமாகிய **SEES** மிஷனெரி ஊழியத்திலும் அதனை தொடர்ந்து **GMS** ஊழியத்தில் இன்றுவரை ஊழியம் செய்து வருகிறேன். ஜம்மணபுதூர், பனந்தோப்பு, தோரணபதி, போச்சம்பள்ளி, சிந்தல்பாடி, பெத்தூர் ஆகிய பணித்தளங்களிலும் தற்பொழுது விஷமங்கலம், சென்னூர் பணித்தளங்களில் பணியாற்றி வருகிறேன்.

எனக்கு மேரி நேசபாய் என்ற மனைவியும், யாபேஸ்பால் என்ற மகனும் புஷ்பா என்ற மருமகளும் இருக்கிறார்கள். எனக்காகவும், என்னுடைய ஊழியத்திற்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

## ஜம்மணபுதூர், தோரணம்பதி பணித்தளங்களில் பழுதடைந்து காணப்படும் மிஷனெரி இல்லங்களை கட்டிக் கொடுக்க சபையாக, குடும்பமாக முன்வர அன்போடு கேட்டுக்கொள்ளுகிறோம்













பிச்சிவிளை திருச்சபையில் நடைபெற்ற மிஷனெரி ஆதரவு விற்பனை விழா



திருப்பத்தூர், கிறிஸ்துகுல ஆசிரமத்தில் வைத்து நடைபெற்ற மிஷனெரிகளுக்கான உபவாச ஜெபக்கூடுகையில் கலந்துகொண்டவர்கள்


**Rev. V. சாமுவேல் ரவிராஜ்** M.A., M.Sc., M.S.W., LLB., B.D.,m

பொதுக்காரியதரிசி. செல் : 9487674959

TND குளோபல் மிஷனெரி சங்கம், 368/11, W.G.C. ரோடு,

தந்தி ஆபீஸ் எதிர்புறம், தூத்துக்குடி – 628 003.

போன் : 0461 – 2328911

website: www.tndgms.org / e-mail :tndgms@gmail.com TND Global Missionary Society - GMS



PG Prakash Graphics - 99940 77782